செ.வெ.எண். 077 நாள்: 27.03.2020

**மதுரை மாநகராட்சி கொரோனா தடுப்பு பணியாக காய்கறி மார்க்கெட்டில் கூட்ட நெரிசலை குறைக்கும் வகையில் தற்காலிக மாற்று இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது ஆணையாளர் திரு.ச.விசாகன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

மதுரை மாநகராட்சி கொரோனா நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை பணியாக காய்கறி மார்க்கெட்டுகளில் கூட்ட நெரிசலை குறைக்கும் வகையில் தற்காலிக மாற்று இடங்கள் ஒதுக்கீடு செய்வது தொடர்பாக ஆணையாளர் திரு.ச.விசாகன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (27.03.2020) ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் காய்ச்சலினை முற்றிலுமான தடுப்பதற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் அடிப்படையில் பொதுமக்கள் தங்களை தனிமைப்படுத்திக் கொள்வதன் மூலம் கொரோனோ வைரஸ் காய்ச்சல் பரவுவதனை தடுக்க முடியும் என்பதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் போக்குவரத்து மற்றும் பொதுமக்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த 24.03.2020 அன்று மாலை 6.00 மணி முதல் 21 நாட்கள் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 144ன் கீழ் உரிய நடவடிக்கைகளை கடைபிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

அதன்படி மதுரை மாநகராட்சி மாட்டுத்தாவணி மற்றும் கீழமாரட் வீதி தயிர் மார்க்கெட் உள்ளிட்ட காய்கறி மார்க்கெட்டுகளில் தினமும் அதிகளவில் மக்கள் கூடுவதை தவிர்க்கும் பொருட்டு சமூக இடைவெளியை கடைப்பிடிக்கும் வகையில் காய்கறி மார்க்கெட் கடைகளை தற்காலிகமாக ஒவ்வொரு மண்டலத்திற்கும் கீழ்க்கண்டவாறு பிரித்து அமைக்கப்பட உள்ளது. அதன் அடிப்படையில்,

**மாட்டுத்தாவணி பகுதியில் அமைந்துள்ள காய்கறி கடைகளை பிரித்து தற்காலிகமாக:**

மண்டலம் எண்.1 பகுதியான டி.பி.ரோடு முதல் ரயில்வே காலனி சுற்றுச்சுவர் வரையுள்ள பகுதிகளில் சுமார் 25 கடைகள், பாஸ்போர்ட் அலுவலகம் செல்லும் பென்னர் சந்திப்பு முதல் முத்தையா கோவில் வரையுள்ள பகுதிகளில் சுமார் 25 கடைகள் எனவும், மண்டலம் எண்.2 பகுதியான அப்பல்லோ மருத்துவமனை சந்திப்பு முதல் ஆவின் சந்திப்பு சாலை வரையுள்ள பகுதிகளில் 100 கடைகள், ரேஸ்கோர்ஸ் ரோடு

முதல் மாவட்ட நீதிமன்ற வளாகம் பின்புறம் சாலை 100 கடைகள், ஆயுதப்படை மைதானம் (ஏ.ஆர். மைதானம்) பகுதியில் 75 கடைகள், ஐயர் பங்களா கிருஷ்ணன் கோவில் மைதானம் பகுதியில் 75 கடைகள், சர்வேயர் காலனி முதல் மாட்டுத்தாவணி செல்லும் 120 அடி சாலை பகுதியில் 100 கடைகள் எனவும், மண்டலம் எண்.3 பகுதியான தெப்பக்குளம் தியாகராசர் பள்ளியின் தெற்கு சுற்றுச்சாலையில் 50 கடைகள் எனவும், மண்டலம் எண்.4 பகுதியான ஹார்விப்பட்டியில் இருந்து கலைவாணி திரையரங்கம் செல்லும் சாலையில் 50 கடைகள் எனவும் பிரிக்கப்பட்டு தற்காலிகமாக நகர்வு செய்யப்படுகிறது.

மேலும் **கீழவெளி வீதி தயிர் மார்க்கெட் பகுதியில் உள்ள காய்கறிக் கடைகளை:**

யானைக்கல் கல்பாலம் பகுதியில் 50 கடைகள், கீழவெளிவீதி தெப்பக்குளம் ரோடு சந்திப்பு முதல் தூய மரியன்னை மேல்நிலைப்பள்ளி சந்திப்பு வரையுள்ள பகுதிகளில் 50 கடைகள் எனவும் பிரிக்கப்பட்டு தற்காலிகமாக நகர்வு செய்யப்படுகிறது.

இக்கடைகள் காலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை செயல்படும். பொருட்களை வாங்க வரும் பொதுமக்கள் சமூக இடைவெளியாக 1 மீட்டர் இடைவெளியில் நின்று பொருட்களை பெற ஏதுவாக கோடுகள் வரையப்பட்டுள்ளது.மேலும் பொதுமக்களின் வசதிக்காக தற்காலிக கழிவறைகள் வசதியும், பொதுமக்கள் கைகளை சுத்தம் செய்ய ஏதுவாக ஆங்காங்கே தண்ணீர் தொட்டிகள், வாஷ்பேசின் அமைக்கப்பட்டு வருகிறது. தற்காலிக கடைகளை சாலையின் ஒருபுறம் மட்டும் அமைக்குமாறும், காய்கறி வாங்க வரும் பொதுமக்கள் தங்களது வாகனங்களை எதிர்புரம் இடையூறு இல்லாமல் நிறுத்துமாறும், சமூக இடைவெளியினை கடைப்பிடித்து முகக்கவசம் அணிந்து வருமாறும் ஆணையாளர் திரு.ச.விசாகன். இ.ஆ.ப. அவர்களால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இக்கூட்டத்தில் நகரப்பொறியாளர் திரு.அரசு, உதவி ஆணையாளர்கள் திரு.பழனிச்சாமி, திரு.பிரேம்குமார், மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சித்திரவேல், உதவி ஆணையாளர் (வருவாய்) திரு.ஜெயராமராஜா, உதவி ஆணையாளர் (கணக்கு) திரு.சுரேஷ்குமார், உதவி வருவாய் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செ.ம.தொ.அ
மதுரை மாநகராட்சி